மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 57/2021 நாள்– 14.10.2022

வாதியின் 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– தங்கமாரிமுத்து (வா.சா.1) | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 ம் சாட்சியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) வாதியின் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா பட்டா எண்.315 அசல் – வா.சா.ஆ–1

2) 30.04.2008 ம் தேதியிட்டட வாதியின் தந்தை சுப்பையா இறப்புச்சான்றிதழ் அசல் – வா.சா.ஆ–2

3) 27.05.2008 ம் தேதியிட்ட சுப்பையாவின் வாரிசு சான்றிதழ் அசல் – வா.சா.ஆ–3

4) 23.01.2016 ம் தேதியிட்ட வாதியின் தாயார் வள்ளியம்மாள் இறப்புச்சான்றிதழ் அசல் – வா.சா.ஆ–4

5) 16.11.2007 ம் தேதியிட்ட வாதியின் சகோதரர் மாரீஸ்வரன் இறப்புச்சான்றிதழ் அசல் – வா.சா.ஆ–5

6) 24.06.2020 ம் தேதியிட்ட வாதியின் சகோதர, சகோதரிகள் வாதிக்கு எழுதிகொடுத்த கிரையப்பத்திரம் அசல் – வா.சா.ஆ–6

7) 15.03.2021 ம் தேதியிட்ட சாத்தூர் வட்டாட்சியர் வாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்த உத்தரவு அசல் – வா.சா.ஆ–7

8) 2015–2016, 2018–2019, 2019–2020, 2020–2021 ஆண்டுகளுக்கான வாதி தொழில்வரி நென்மேனி ஊராட்சிக்கு செலுத்திய ரசீதுகள் (எண்ணம் 4) அசல் – வா.சா.ஆ–8

வாதி வழக்கறிஞரின் வேண்டு கோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.